**Deposition of Witness**
**Additional Subordinate Judge, Tenkasi.**

Mcop 95 of 2023

**.மா.சா.1 மல்லிகா**

| | |
|---|---|
| Name | : **மல்லிகா** |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Religion | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 11.06.2025 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிருபண வாக்குமுலம் தாக்கல்

நான் இந்த வழக்கில் 1ம்மனுதாரர். நான் என்னுடைய நிருபண வாக்குமுலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். முதல் தகவல் அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ1. லேட் நல்லமுத்துவின் பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் இறப்பு சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ2. டி.என்.88.டி.1532 என்ற பதிவு எண் கொண்ட 2ம்எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட வாகனத்தின் பதிவு சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ3. மேற்படி வாகனத்தின் காப்பீடு சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ4. டி.என்.79.எச்.6032 என்ற பதிவு எண் கொண்ட லேட் நல்லமுத்துவிற்கு பாத்தியப்பட்ட வாகனத்தின் காப்பீடு சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ5. மேற்படி வாகனத்தின் பதிவுச் சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ6. 1ம் எதிர்மனுதாரரின் ஒட்டுனர் உரிமம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ7. லேட் நல்லமுத்துவின் ஒட்டுனர் உரிமம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ8. 13.2.2023ம்தேதியில் நாலாட்டின்புதூர் காவல்நிலைய குற்ற எண்.7/23 ஐ மறுபுலனாய்வு செய்யக்கோரி தூத்துக்குடி காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு பதிவு தபால் மூலம் மனு அனுப்பியதற்கான மனு கையிருப்பு நகல் ம.சா.ஆ9. மேற்படி மனுவை தூத்துக்குடி காவல் கண்காணிப்பாளர் தரப்பில்

பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 10. மனுதாரர்களின் குடும்ப அட்டை மற்றும் 2,3 மனுதாரர்களின் பிறப்பு சான்று மற்றும் ஆதரர் அடையாள அட்டை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 11. மனுபடி உத்தரவாக வேண்டுகிறேன்.

3 மற்றும் 4 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்து மதுரை – திருநெல்வேலி தேசிய நெடுஞ்சாலையில் கீழ்பக்கமாக உள்ள சர்வீஸ் ரோட்டில் நடந்தது என்றால் சரிதான். அந்த ரோடு தென்வடல் ரோடு என்றால் சரிதான். என் கணவர் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்தார் என்றால் சரிதான். விபத்து நடந்தது அதிகாலை 4 மணி என்றால் சரிதான். விபத்து குமரன் பெட்ரோல் பல்க் முன்பு நடந்தது என்றால் சரிதான். பெட்ரோல் பல்க் முன்பு நின்று கொண்டிருந்த லாரியில் தான் என் கணவர் மோதிவிட்டார் என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக நான் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் இல்லை. நான் தான் புகார் கொடுத்துள்ளேன் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. என் கணவர் அதிகாலை தூக்ககலக்கத்தில் அதிவேகமாக வாகனத்தை ஒட்டி 2 ம்எதிர்மனுதாரர் வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்றால் சரியல்ல. என் கணவரின் வருமானத்தை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.என் கணவர் தான் விபத்தை ஏற்படுத்தியதால் 3,4 எதிர்மனுதாரர்கள் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல. என் மனு 3,4 எதிர்மனுதாரர்களின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)ஏ.பிஸ்மிதா

கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.

**Deposition of Witness**
**Additional Subordinate Judge, Tenkasi.**
Mcop 95 of 2023
.மா.சா.2 மகாராஜா

| | |
|---|---|
| Name | : மகாராஜா |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Religion | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 11.06.2025 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிருபண வாக்குமுலம் தாக்கல்

நான் இந்த வழக்கில் 3ம் நபர் நான் என்னுடைய நிருபண வாக்குமுலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

(நிருபண வாக்குமூலம் தாக்கல் ஆவணங்கள் தாக்கல் இல்லை)

3 மற்றும் 4ம்எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்குவிசாரணை

விபத்து சம்பந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். நானும், விபத்தில் இறந்து போன நல்லமுத்துவும் ஒரே ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். நான் நல்லமுத்துவின் உறவினர் என்றால் இல்லை. நான் சென்னையில் டிரான்ஸ்போர்ட்டில் வேலை செய்து வருகிறேன். விபத்து சமயம் நான் சென்னையில் தான் இருந்தேன் என்றால் விடுமுறையில் ஊருக்கு வந்து மதுரைக்கு ஒரு வேலை சம்பந்தமாக சென்று கொண்டிருந்தேன். நான் விடுமுறையில் வந்த விபரம் என் கம்பெனியின் வருகை பதிவேட்டை பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். எங்கள் ஊர் அழகுநேரியில் இருந்து மதுரைக்கு

செல்லவேண்டும் என்றால் நாலாட்டின்புதூர் சென்று தான் போக வேண்டும் என்றால் சரிதான். நாலாட்டின்புதூர் ரோடு கோவில்பட்டி வழியாக மதுரைக்கு செல்லும் என்றால் சரிதான். அந்த ரோடு திருநெல்வேலி டு மதுரை தேசிய நெடுஞ்சாலை தென்வடல் ரோடு என்றால் சரிதான். நான் மேற்படி ரோட்டில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சென்றேன் என்றால் சரிதான். விபத்து தேசிய நெடுஞ்சாலைக்கு கீழ்புறமுள்ள சர்வீஸ் ரோட்டில் நடந்தது என்றால் சரிதான். நல்லமுத்து தான் நின்று கொண்டிருந்த லாரி மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்றால் சரியல்ல. நல்லமுத்து என் உறவினர் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்)ஏ.பிஸ்மிதா

கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.